வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

நாள்: 08.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

*தலைப்புச் செய்திகள்*

இந்தியா-நியூசிலாந்து நாடுகளுக்கு இடையயே இருதரப்பு உறவுகள் குறித்த முன்னேற்றத்திற்கான ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

இந்திய மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

75ஆம் ஆண்டு சுதந்திர தின கொண்டாடத்தையொட்டி இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், நாளை முதல் தொடங்க உள்ளதாக, மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில், மக்களுக்காக செய்து வரும் நலத்திட்டங்களை குறைக்க முடியாது என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்தார்.

பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில், இநதியாவின் அமன் ஷராவத், அரையிறுதிக்கு முன்னேறி உள்ளார்.

-------------------------------

முர்மு 1 (17)

தேசத்தை கட்டமைப்பதற்கும், சமூக மாற்றத்திற்கும், கல்வி முக்கிய கருவியாக திகழ்கிறது என்று திருமதி திரௌபதி முர்மு கூறினார். 2 நாள் அரசுமுறைப் பயணமாக, நியூசிலாந்து சென்றுள்ள அவர், அந்நாட்டு தலைநகர் வெலிங்டனில் நடைபெற்ற சர்வதேச கல்வி தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கல்வியின் தரத்தை மேம்படுத்த இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, குடியரசுத் தலைவருக்கு, நியூசிலாந்து அரசு மாளிகையில் அந்நாட்டு பாரம்பரிய முறைப்படி வரவேற்பும், அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெலிங்கடனில் உள்ள அரசு இல்லத்தில் அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் மற்றும் துணை பிரதமரும், வெளியுவுத்துறை அமைச்சருமான வின்ஸ்டன் பீட்டர்ஸ் ஆகியோரை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

தொடர்ந்து சுங்க ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டுத் தலைவர்களும் விவாதித்தனர். இந்தியாவும், நியூசிலாந்தும் இருதரப்பு உறவுகள் குறித்த முன்னேற்றத்திற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.

முர்மு 2 (5)

பின்னர், வெலிங்டன் ரயில் நிலையத்தின் முன் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைக்கு குடியரசுத் தலைவர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது கவர்னர் ஜெனரல் டேம் சிண்டி கிரோ, மத்திய இணையமைச்சர் ஜார்ஜ் குரியன், மக்களவை உறுப்பினர்கள் ஜூகல் கிஷோர் ஷர்மா மற்றும் சவுமித்ரா கான் ஆகியோர் உடன் இருந்தனர்.

-------------------------------

*சுதந்திர தினம் (8)*

நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளை கொண்டாட உள்ள நிலையில் இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், நாளை முதல் வரும் 15ஆம் தேதி வரை, நடைபெற உள்ளதாக மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு தொடங்கிய இந்த இயக்கத்தில் 23 கோடி வீடுகளில் தேசிய கொடி ஏற்றப்பட்டதாகவும், 6 கோடி பேர் செல்ஃபி எடுத்து இணைய தளத்தில் பதிவிட்டுள்ளதாகவும், 2023-ல் 10 கோடி பேர் வீடுகளில் தேசிய கொடி ஏற்றியபடி செல்ஃபி எடுத்து பதிவிட்டுள்ளதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த ஆண்டும் இந்த நடைமுறையை சிறப்பிக்க வேண்டுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

-------------------------------

*மாநிலங்களவை (8)*

இந்திய மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்துள்ள அவர், வெளிநாடுகளில் உள்ள இந்திய மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது மத்திய அரசின் முன்னுரிமைகளில் முதன்மையானது என்று கூறினார்.

மேலும், உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் இந்திய மாணவர்கள், அங்குள்ள இந்திய தூதரகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

-----------------------------

*நாடாளுமன்றம் வஃக்பு (17)*

வஃக்பு திருத்த மசோதா 2024-ஐ, மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ மக்களவையில் இன்று தாக்கல் செய்தார்.

இந்த திருத்த மசோதா, மாநில வஃக்பு வாரியங்களின் அதிகாரங்கள், செயல்பாடுகள், வஃக்பு சொத்துக்களின் பதிவு

மற்றும் கணக்கெடுப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மசோதாவிற்கு காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக, இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே.சி வேணுகோபால், இந்த மசோதா கடுமையானது என்றும், நாட்டின் கூட்டாட்சி, கட்டமைப்பின் மீதான தாக்குதல் என்றும் குற்றம்சாட்டினார்.

சமாஜ்வாதி கட்சி தலைவர் திரு. ஹபிபுல்லாவும் இந்த மசோதாவை எதிர்த்து அவையில் பேசினார். வஃக்பு ஒரு மத விஷயம் என்றும், இந்த சட்டம் மத நடைமுறையில் தலையிடுவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்து பேசிய ஐக்கிய ஜனதா தளத்தின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இந்த மசோதா வஃக்பு வாரியம் இந்த சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்றும், அதில் வெளிப்படைத் தன்மையை கொண்டுவருவதற்காக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

--------------------------------

*நாடாளுமன்றம் 2 – MSME (11)*

பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், உதயம் போர்ட்டல் மற்றும் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறையின் கீழ் 20 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று மத்திய அரசு மக்களவையில் தெரிவித்துள்ளது.

கேள்வி நேரத்தின் போது துணை கேள்விகளுக்கு பதில் அளித்த மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜிதன் ராம் மஞ்சி, அமைச்சகத்தின் உதயம் போர்ட்டல் மூலம் 4.8 கோடி பேர் பதிவு செய்துள்ளனர் என்று கூறினார்.

ஆத்ம நிர்பர் திட்டம், கடன் உத்தரவாதத் திட்டம் மற்றும் பிற திட்டங்களின் மூலம், நாட்டில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க அமைச்சகம் முயற்சித்து வருவதாகவும், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் திரு. ஜிதன் ராம் மஞ்சி தெரிவித்தார்.

-------------------------------

*நாடாளுமன்றம் 3-ஜல் ஜீவன் (8)*

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 77 சதவிகித ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள்

வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார். மக்களவையில், துணைக் கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்த திட்டம் தொடங்கப்பட்ட 5 ஆண்டுகளில், 15 கோடி வீடுகள் பயனடைந்திருப்பதாக கூறினார்.

தூய்மையான பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவதால், நோய்கள் தடுக்கப்பட்டு 8 லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

-----------------------------

*வயநாடு (12)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 10ஆம் தேதி, கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட உள்ளார்.

கண்ணூர் மற்றும் வயநாடு பகுதிகளில் பிரதமர் விமானம் மூலம் ஆய்வு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில் கேரளா மற்றும் கர்நாடகாவில் உள்ள ராணுவ பிரிவுகளைச் சேர்ந்த 500 ராணுவ வீரர்கள் வயநாட்டில் இருந்து திரும்ப உள்ளனர். இன்று பிற்பகல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ராணுவத்தினருக்கு சிறப்பான வழியனுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாநில அமைச்சர்கள், முகமது ரியாஸ், சசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீட்பு நடவடிக்கைகளுக்கு கடந்த 9 நாட்களாக ஆதரவு அளித்த உள்ளூர் மக்களுக்கு ராணுவ வீரர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

------------------------------

*சட்டமன்றம் ரங்கசாமி* (17)

புதுச்சேரி சட்டப் பேரவையில் பட்ஜெட் மீதான விவாதம் இன்று 6ஆவது நாளாக காலை 9.30 மணிக்கு தொடங்கியது.

நிதி நிலை அறிக்கை தொடர்பாக பேசிய முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மக்களுக்காக செய்து வரும் நலத்திட்டங்களை குறைக்க முடியாது என்றும், புதுச்சேரி மாநிலம் பெரிய வளர்ச்சி அடைய வேண்டும் என்பது தமது எண்ணம் என்று கூறினார்.

அனைத்து உறுப்பினர்களும் மக்களவையில் குரல் கொடுத்து புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பல புதிய நிறுவனங்களை புதுச்சேரிக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், வருங்காலத்தில் விரைவில் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும் என்றும், தொழிற்சாலைகளை உருவாக்கி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

சென்டாக் மூலம் காமராஜர் நிதி உதவித் தொகை மாணவர்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு 480 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், திருக்காஞ்சி விரைவில் ஆன்மீக சுற்றுலா தளமாக மாற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

-------------------------------

*சட்டபேரவை-சிவா 2 (11)*

புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்று நடைபெற்ற பட்ஜெட் மீதான விவாதங்களில் எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா பேசினார். அப்போது அவர், மருத்துவ கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் 50 சதவிகித இடங்களை அரசுக்கு பெற மத்திய அரசும், தேசிய மருத்துவ ஆணையமும் உத்தரவிட்ட பின்பும், புதுச்சேரியில் இது பின்பற்றப்படவில்லை என்று குற்றம் சாட்டினார். இதற்கு பதில் அளித்த சபாநாயகர் திரு. ஆர் செல்வம், முதலமைச்சருடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். இந்த பதிலை ஏற்காத எதிர்கட்சியினர் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதனிடையே எதிர்கட்சிகளின் வெளிநடப்பை தொடர்ந்து சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நேரு, திரு. அங்காளன் ஆகியோரும் அவையில் இருந்து வெளியேறினர்.

-------------------------------

*விருது 1 (13)*

இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் மிக உயரிய ராஷ்ட்ரீய விஞ்ஞான புரஸ்கார் விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்திய அறிவியல் கழகத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ஜி பத்மநாபன், உயிரியல் அறிவியலுக்கான விக்யான ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் எந்தவொரு துறையிலும், வாழ்நாள் சாதனைகள் மற்றும் பங்களிப்புகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.

ஆனந்தகிருஷ்ணன், சி. உமேஷ் வர்ஷ்னே, பீம் சிங், ஆதி மூர்த்தி, சையத வாஜ் அகமது நக்வி, சஞ்சய் பிஹாரி மற்றும் ராகுல் முகர்ஜி ஆகியோர் விக்யான் ஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் பப்பி பால், டாக்டர் அபிலாஷ், ராதாகிருஷ்ணன் மகாலட்சுமி, புரபி சைகியா, திகேந்திரநாத் ஸ்வைன், பிரபு ராஜகோபால், பிரசாந்த் குமார் ஆகியோர் விக்யான் யுவா விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

விருது 2 (5)

பல்வேறு துறைகளின் கண்டுபிடிப்புகள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆகியோரின் குறிப்பிடத்தக்க மற்றும்

ஊக்கமளிக்கும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

அனைத்து பிரிவுகளுக்குமான விருது விழா, தேசிய விண்வெளி தினத்துடன் இணைந்து இம்மாதம 23ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------------------------

*சுதந்திர தினம்- இஸ்ரோ (8)*

சுதந்திர தினத்தன்று புவி கண்காணிப்பு செயற்கை கோளை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து காலை 9.17 மணிக்கு விண்ணில் செலுத்த உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. பேரிடர் கண்காணிப்பு, தீ விபத்து, வெள்ள அபாயங்களை கண்டறிதல், ஊதா கதிர்வீச்சு அளவீடு தொடர்பாக இதன் செயல்பாடு இருக்கும் என்றும் இஸ்ரோ கூறியுள்ளது.

இஸ்ரோவால் உருவாக்கப்பட்ட EOS-08 அதி நவீன செயற்கை கோள் 500 கிலோ எடை கொண்டது என்றும், 500 கிலோ மீட்டர் சுற்றுப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

ஒலிம்பிக் (16)

பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில், இநதியாவின் அமன் ஷராவத், அரையிறுதிக்கு முன்னேறி உள்ளார். இன்று நடைபெற்ற ஆடவர் 57 கிலோ எடை பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11க்கு பூஜ்ஜியம் என்ற புள்ளிக் கணக்கில், ரஷ்யாவின் செலிம்கான் அபக்காரோவ்-ஐ வென்றார்.

ஹாக்கி போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா தற்போது ஸ்பெயினை எதிர்த்து ஆடி வருகிறது.

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன்-அர்ஜூன் கதே இணை, காலிறுதிக்கு முன்னேறி உள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு, காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணை 7க்கு 6, 6க்கு 1 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் இனிகோ சர்வேண்டஸ்-டேனியல் ரின்கான் இணையை வென்றது.

பாண் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன்-விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறி உள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை 7க்கு 5, 6க்கு 3 என்ற செட் கணக்கில் பிரேசிலின் புசினெல் டி அல்மெய்டா-டட்ரா ட சில்வா இணையை வென்றது.

-------------------------------

வாலிபால் (6)

காத்மாண்டுவில் உள்ள தஷ்ரத் ஸ்டேடியத்தில் நடைபெற்ற காவா மகளிர் கைப்பந்து நேஷன்ஸ் லீக் இறுதிப் போட்டியில், நேபாள அணியை 3க்கு 2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் காவா மகளிர் கைப்பந்து நேஷன்ஸ் லீக்கில் இந்தியா 2ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இந்த போட்டியில் இந்தியா தங்கப் பதக்கத்தையும், நேபாளம் வெள்ளிப் பதக்கத்தையும், ஈரான் வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

-------------------------------

புத்ததெப் இரங்கல் (12)

மேற்குவங்க முன்னாள் முதலமைச்சர் புத்ததெப் பட்டாச்சாரியா உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று காலை கொல்கத்தாவில் காலமானார். அவருக்கு வயது 80.

அன்னாரது மறைவு குறித்து சமூக ஊடகப்பதிவில் இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அவர் ஒரு சிறந்த அரசியல் தலைவர் என்றும், மிகுந்த அர்ப்பணிப்புடன் மாநிலத்திற்கு சேவை செய்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புத்ததெப் பட்டாச்சாரியா மறைவுக்கு, மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பேனர்ஜி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் அவரது இறுதி சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த அவர் 2000மாவது ஆண்டு முதல் 2011ஆம் வரை, மேற்குவங்க முதலமைச்சராக பதிவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

-----------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியா-நியூசிலாந்து நாடுகளுக்கு இடையயே இருதரப்பு உறவுகள் குறித்த முன்னேற்றத்திற்கான ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

இந்திய மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

75ஆம் ஆண்டு சுதந்திர தின கொண்டாடத்தையொட்டி இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், நாளை முதல் தொடங்க உள்ளதாக, மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில், மக்களுக்காக செய்து வரும் நலத்திட்டங்களை குறைக்க முடியாது என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்தார்.

பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில், இநதியாவின் அமன் ஷராவத், அரையிறுதிக்கு முன்னேறி உள்ளார்.